நுவரெலியா

# ஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆலய
# ஸ்ரீ காயத்ரீ தேவி

## மஹா கும்பாபிஷேக விழா

### சிறப்பு மலர்




5.1உ
வங்
IPR


1986



*With best Compliments from :-*

# Jupiter Steel

355, OLD MOOR STREET,
COLOMBO -12.

Phone : 549818 - 36443

Telex ; JUPITER CE 22866

310, OLD MOOR STREET,
COLOMBO-12.

26, QUARRY ROAD,
COLOMBO-12.

## Jupiter Timber Stores

16, ARMOUR STREET,
COLOMBO-12.

Tele : 32606

## Jupiter Timber Mills

201, ST. JOSEPH STREET,
COLOMBO-14.

Tele : 34465

# முன்னுரை

எனது தெய்வீகத் தொண்டினை இம்மண்ணுலகுவாழ் மக்களுக்கு ஆற்றிட என்னை பிள்ளையாக ஈந்த என் அன்னை பிதாவுக்கு எனது முதல் வணக்கம் கூறி, ஆன்மீகத்துறையில் ஆழ்த்தி என்னை ஆட்கொண்டு வழி நடத்தும் சுத்குருபகவானின் திருவடிகளுக்கு பல்கோடி வணக்கங்களைக் காணிக்கையாக்கி இறைஞ்சுகின்றேன்.

ஓம் ஆதி ஸக்தே ஜகன் மாதா
பக்தானுக்கிரக காரணி
நமஸ்துப்யம், நமஸ்துப்யம், நமஸ்துப்யம் பிரஸிதமே
அஃதாவது
பிரபஞ்சத்தின் முதல் சக்தியானவளே !
பிரபஞ்சத்தின் தாயே !!
பக்தர்களுக்கு உதவுபவளே !!!
காயத்ரீ தேவி !!!! — உன்னை
வணங்குகின்றேன்.
எனக்கு நீ அருள்தா அம்மா !!!!.

நுவரெலியா ஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆலயத்தில் ஸ்ரீ காயத்ரீ தேவியின் திருவுருவை பிரதிஷ்டை செய்து நடைபெறுகின்ற மகா கும்பாபிசேக விழாவை முன்வைத்து இந்த சிறப்புமலரை வெளியிட்டு பக்தர்களின் திருக்கரங்களில் படைப்பதை எண்ணி உள மகிழ்வுடன் சாந்தியடைகின்றேன்.

ரிஷி பரம்பரையினரின் தொடர்பு எனக்கு சுமார் இருபத்தைந்து ஆண்டுகால முன்னணியில் நான் பாரத நாட்டில் யாத்திரை மேற்கொண்டிருந்த தருணத்தில் எனது பூர்வ புண்ணிய தவப்பயனாகக் கிடைத்தது.

ரிஷிகளால் ஸ்ரீ காயத்ரீ தீட்சை பெற்ற நான் என் குருநாதரின் உபதேச வழியினையே என் வழியாக ஏற்று காயத்ரீ தேவியின் உபாசனை செய்து வரலானேன். இதன் பயனாக அன்னை காயத்ரீ தேவியின் திவ்யதரிசனம் கிடைத்தது..... அன்னையின் அருளினால் அமைதியும் பரமானந்தமும் மிக்க அருள்வாழ்வே பெருவாழ்வு என்னும் உண்மை நிலைக்குள் உட்புகுந்தேன். அங்கே பிரமானந்தம் என்னும் பரமசுகத்தை அனுவனுவாக அனுபவித்து என் தெய்வீக அனுபவத்தை அனைவரும் பெறவேண்டுமென்ற சிந்தையில் ஆழ்ந்தேன். எனது எண்ணம் வண்மை பெறும் நோக்கத்தில் தலைநகரான கொழும்பிலும், மற்றும் இடங்களிலும் பக்தர்களை வரவழைத்து அவர்கள் மத்தியில் காயத்ரீ பூஜைகள் செய்யலானேன் ஸ்ரீ காயத்ரீயின் வழிபாட்டிற்கு ஒரு தனிப்பெரும் ஆலயம் அவசியத்திலும் அவசியம் என்று என் எண்ணங்கள் தொடர அதை தேவியின் தியானத்தில் வைத்தேன்.

ஸ்ரீ காயத்ரீ பூஜையில் சிங்களப் பெண்மணியொருவர் பங்குகொண்டு வரலானார், காயத்ரீ பூஜையில் தவறாமல் பங்குபற்றியதனால், தேவையான பயனையும் மறுவாழ்வையும் கிடைக்கப்பெற்றதனை உணர்ந்த அவர் அவருக்குச் சொந்தமான காணியை மனமுவந்து அன்பளிப்பு செய்தார். மனித சஞ்சாரம் செய்ய முடியாதபடி பேய்களின் தலைவிரி கோலம் நாற்பது ஆண்டுகாலமாக

திருமதி பத்மா சோம
24.08.2006
N. SOMAKANDHAN
Justice of the Peace for All Island
Reg. No. 2000/07/JJ/All B/311
215 G 1/1, Park Road, Colombo-5

நடந்துவந்தன. அவ்வளவு பயங்கரம் நிறைந்த பாழடைந்த அக்காணியிலுள்ள வீட்டில் நான் தேவியின் துணையுடன் புகுந்தேன் பேய்களின் அட்டகாசம் அங்கு நிறைந்து விளங்கின !!. இந்த அட்டகாசத்தை நானே நேரில் காணலானேன் அக்கம் பக்கத்தினர் பரிகசித்தனர், எச்சரித்தனர்.

எனது சத்குருமூர்த்தியை நெஞ்சில் நினைத்து அன்னை காயத்ரீ மந்திரத்தை ஜெபிக்கலானேன் பேய்கள் போன இடமோ தெரியவில்லை !!. காயத்ரீ தேவியின் சக்தியினால் பேய்களை விரட்டி வாழ்ந்த என்னில் பற்றுகொண்ட பக்தர்கள் அன்றுடம் வரத்தலைப்பட்டனர்.

1978-ம் ஆண்டில் ஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆலயம் அமைத்து, உரிய வழிபாடுகளை மேற்கொண்டிருந்த வேளையில், இந்தியாவில் பன்னிரண்டு வயது முதல் கடும் தவமிருந்து புனித நர்மதா நதியில் தனக்குக் கிடைத்த ஜோதிலிங்கத்தை ஸ்ரீஸ்ரீஸ்ரீ, சிவபாலயோகி மகராஜ் தனது திருக்கரங்களாலேயே இவ்வாலயத்தில் பிரதிஷ்டை செய்யலானுர்,

இவ் ஆலயத்தில் பௌர்ணமி தினங்களில் ஸ்ரீ காயத்ரீ யாகபூஜை நடைபெற்று வந்ததன் பயனுக ஸ்ரீ காயத்ரீ தேவிக்கு ஆலயம் ஒன்றை அமைத்துத்தர பௌத்தர் ஒருவர் விரும்பியதன் பயனுக இதே ஆலயத்தின் உள்வட்டத்திற்குள் தேவியின் திருவாலயம் உதயமாகியது.

பௌத்தர் ஒருவரின் அன்பளிப்பில் உதயமான இவ்வாலயத்திற்கு பணிஉதைந்த மலைவளம் சூழ்ந்த வனங்களில் கடும் தபசிகள், ரிசி பரம்பரையினர் சித்தர் மரபினர் அருளாசிகளுடன் கடந்த வருடம் (1985) ஆகஸ்டு மாதம் அன்னை காயத்ரீ தேவியின் விக்ரகம் வைக்கப்பட்டு நித்திய பூஜைகள் நடைபெறறு வருகின்றன.

இத்தகைய அருட் கோலங்களை மனதில் கொண்டுள்ள எனது சிந்தனைக்கும் அறிவுக்கும் எட்டாத, விஞ்ஞானிகளுக்கும் புலப்படாத அருட்சக்தியின் வடிவே' இவ்வாலயத்தை நடத்தி வருவதாகவே நான் உணர்கிறேன்.

நீலகிரி பொதிகை மலைச்சாரலிலே சிரஞ்சீவியாய் வாழ்ந்து வரும் என் குருதேவரின் அருட்சக்தியே என்னை திசைமாருமல் வழிநடத்தி தேவையானவற்றை எல்லாம் அற்புதமான வகையில் நிறைவேற்றி வருகின்றதென்பதையும் இவ்விடத்தில் நன்றியுடன் குறிப்பிடவும் விரும்புகிறேன்.

பல லட்ச ரூபாய் செலவில் தியான மண்டபமும் யாத்ரீகர் மடமும் நிர்மானிக்கப்பட்டுள்ளதால் உலகின் பல பாகங்களிலும் உள்ளோர் அவற்றை பயன் படுத்தியே குவது உள்ளம் குளிர்ந்த செய்தியாகும். இன்னும் கூறவேண்டுமானல் ஜீவன்முத்தர்கள், அருந்தவயோகிகள் தெய்வீக நன்மணிகள் என்போர் இங்கு வருகை தந்து தியானத்தில் மெய்மறந்திருந்து ஆன்ம இன்பத்தை பருகிச் செல்வதும் இனிய செய்தியுமாகும். இததகைய சக்தி நிறைந்ததும் அகிலத்தில் அற்புதமாகவும் விளங்கும் அன்னை காயத்ரீ தேவியின் மகா கும்பாபிஷேக வைபவம் ரிசி முனிவர்களின் ஆசியுடன் நடைபெறும் இவ்வேளையில் பேதமற்ற நிலையில் தெய்வீகப் பேரானந்த அருள்மழையில் நனைந்து முக்தியும் சித்தியும் பெற்று, இலங்கையில் அமைதிச் சூழலில் ஆனந்தம் மேவிட இதய சுத்தியுடன் வழிபடுவோமாக

ஸ்ரீ காயத்திரி சித்தர்.
ஆர். கே. முருகேசு சுவாமிகள்


ஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆலயம்,
நுவரெலியா




Sri Lankatheeswarar




Sri Gayathri Devi



Shri Sivabalayogi Maharaj



ஸ்ரீ காயத்ரீ சித்தர் முருகேசு சுவாமிகள்



ஸ்ரீ காயத்ரீ சித்தர் முருகேசு சுவாமிகள்



சுவாமிஜி ஸ்ரீ முருகேசு அவர்கள் ஸ்ரீ ஞானனந்தகிரி அவர்களை தரிசித்து நல்லாசிபெற்றபோது எடுத்தபடம்

# ஞானனந்த தபோவனம்

திருக்கோயிலூர்

தமிழ் நாடு

---

12-8-67

அருள் முருகேசு, ஆசிகள்

ஸ்ரீ ஸத்குரு நாதன் திருவருள் கடாக்ஷம் பெற்று, தெய்வநெறியும், ஆத்மீகத் துறையும், அந்தரங்கத்தில் பெற்று லௌகீக உலகத்தில் மக்கள் சமூகத்துடன் புகழும், புனிதமான செயலும், ஷத்குருநாதனிடத்தில் உள்ளம் பற்றிதனதென்று விட்டு, தானென் றதையகற்றி தன்னலமற்றி செயல் புரிந்து, சிருற்ற நிலைமையில் அருள்பெற்று, அன்பு பெற்று அதனிடத்தில், அதுவாகி நிலைபெற்றிருக்கும்படி மீண்டும் பன்முறை ஆசிர்வாதம்

தங்கள் முயந்சி பரிபூரண வெற்றி பெற்று இலங்கையில், சிறந்ததோர் ஆச்சிரமம் அமையட்டும்.

ஸத்குரு சுவாமி ஞானனந்தகிரி

165 வருடங்கள் கடும் தபம் செய்து மாபெரும் தவ ஆற்றலைப் பெற்றவரும், சுமார் 300 வருடங்கள் வாழ்ந்தவருமான, ஸத்குரு ஸ்ரீ ஞானனந்தகிரி 1967ம் ஆண்டு சுவாமி முருகேசு அவர்களுக்கு அனுப்பிய ஆசிச் செய்தி.

# மோக்ஷலோக உதயம்

எத்தனை தான் சாமிகளைக் கும்பிட்டாலும், ஏற்றமிகு சொற்பொழிவு கேட்டிட்டாலும், பலகாலம் புத்தகங்கள் படித்திட்டாலும், பலகலைகள் பாங்குறவே கற்றிட்டாலும் பரிணமம் உயரும்வரை ஞானம் தோன்ருு, பரந்தாமன் மோக்ஷமது கிட்டிடாதப்பா.

★ ★ ★

தாவரங்கள் தோன்றி, வளர்ந்து, பயன்தர பரிணம காலமுண்டு, பறவைகள், விலங்குகள் தோன்றி, வாழ்ந்து மறைய பரிணம வரையறை உண்டு. பூமிக்கும் அதைப் படைத்த பிரமனுக்கும் பரிணம எல்லையுண்டு மனிதன் மெஞ்ஞானம் பெற்று, மோக்ஷம் பெறப் பரிணம சக்தியுண்டு.

★ ★ ★

மனித பரிணமம் பல பிறவிகளைக் கொண்டது. சில பிறவிகளுக்குப் பின்பு தான் அவனுக்கு ஞானம் பிறக்கும் அதன் வழி மோக்ஷம் கிடைக்கும்.

சித்தர்களிடம் சரண்புகும் மாணவர்கள் மோக்ஷம் பெற இன்னும் பல பிறவிகளை யெடுக்க வேண்டியிருந்தாலும் குருமார்கள் ரகசிய வித்தைமூலம் அவர்களின் பரிணமத்தைத் துரிதப்படுத்திவிட, மாணவர்கள் இந்தப் பிறவியிலேயே மோக்ஷம் பெற்று விடுகிருர்கள்.

அத்தகைய ரகசிய சித்த சாதனையைக் கற்று, உங்கள் பரிணமத்தைத் துரிதப் படுத்தி, மிக விரைவில் மெஞ்ஞானம் பெற்று, பிறவிப் பெரும் பயனை இகத்திலும், பரத்திலும் பெற விரும்புகிறீர்களா? அப்படியானல் அதற்கான வாய்ப்பு இலங்கையில் கிடைக்கவிருக்கிறது.

தொடர்பு கொள்ளவும்:-

**ஸ்ரீ காயத்ரீ சித்தர்**
ஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆலயம்,
(யோகாஸ்ரமம்)
நுவரெலியா.




PHONE: 65660


# ஸ்ரீ ஸ்கந்தாஸ்ரமம்

(REGD)


உடையாப்பட்டி சேலம் - 636140

ஸ்கந்தகிரி தேதி 31-7-1985



Govt. of Madras
Certificate of Registration of Societies
Act. XXI of 1860 - 5 No. 60/69


ஸ்ரீ ஸ்ரீ ஸத்குரு சாந்தானந்த ஸ்வாமிகளவர்களுடைய

## அருளாசிச் செய்திகள்

ஸ்ரீ ஸ்ரீ ஸத்குரு சாந்தானந்த சுவாமியவர்களுடைய விசேசமான ஆசிர்வாதத்தையும் அனுக்கிரகத்தையும் பெருமதிப்பிற்கும் மரியாதைக்கும் உரியவரான காயத்ரீ சித்தர் ஸ்ரீ ஸ்ரீ, சுவாமி ஆர். கே. முருகேசு அவர்களின் சமூகத்தில் பணிவன்புடன் கோடானுகோடி வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்வதாவது, எவ்வித சுய நல நோக்கமும் இல்லாமல் 10 ஆண்டுகளாக மக்கள் நலம் கருதி தொண்டு செய்துவரும் ஸ்ரீ ஸ்ரீ காயத்ரீ சித்தர் ஸ்ரீ ஸ்ரீ ஆர். கே. முருகேசு அவர்களே!

தாங்கள் 18-7-85 அன்று எழுதிய கடிதத்தை ஸ்ரீ ஸ்ரீ சத்குரு சாந்தானந்த ஸ்வாமியவர்கள் பார்வையிட்டு மிக்க சந்தோசமடைந்தார்கள். மக்கள் அனைவருக்கும் அறம், பொருள், இன்பம் வீடுகளாகிய சதுர்வித புருஷார்த்தத்தையும் இம்மையில் உறுதியாகத் தரும் ஸ்ரீ ஸ்ரீ காயத்ரீ தேவியின் சிலா விக்ரகப் பிரதிஷ்டையை ஸ்ரீ லங்காவில் ஸ்ரீ ஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆலயத்தில் பெருமதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய ஸ்ரீ ஸ்ரீ சுவாமி ஆர். கே. முருகேசு அவர்கள் நாட்டின் நலம் கருதி, மக்களுக்கு அறிவு பிரகாசிக்கவும், ஆற்றல் பெருக்கெடுக்கவும், அன்பு மயமான, அறிவு மயமான, ஆத்ம ஸ்வரூபமான ஆதிபராசக்தியெனப் போற்றப்படும் ஜகஜ்ஜனனியான ஸ்ரீ மாதா காயத்ரீ தேவியை தாங்கள் பிரதிஷ்டை செய்வது என்பது உலகம் செய்த பாக்கியம் என்றுதான் சொல்ல வேண்டுமென ஸ்ரீ ஸ்ரீ ஸத்குரு ஸ்வாமிகளவர்கள் தெரிவிக்கச் சொன்னதுடன், ஸ்ரீ ஸ்ரீ காயத்ரீ சித்தராகிய சுவாமி ஆர். கே. முருகேசு அவர்கள் செய்துவரும் நிஷ்காம்ய கைங்கரியத்தினால் இலங்கைத்தீவில் ஏற்பட்டுள்ள (உலகில் ஏற்பட்டுள்ள) ஏற்பட்டுவரும், அதிபயங்கரமான சூழ்நிலைகள் அனைத்துமே மாறி இலங்கைத் தீவில் ஸ்ரீ ஸ்ரீ இலங்காதீஸ்வரருடைய கிருபா கடாக்ஷத்தாலும் அகிலாண்ட கோடி பிரமாண்டநாயகியும் உலக மக்கள் ஒவ்வொருவரின் அழிவற்ற அறிவாகவும், ஆத்ம சக்தியாகவும், ஆதி பராசக்தியாகவுமே இருந்துவரும் ஸ்ரீ மாதா காயத்ரீ தேவியின் பரிபூரணமான திருவருளாலும் உலகில் சாந்தியானது உறுதியாக ஏற்பட்டு மக்களனைவருக்குமே நல்லனவெல்லாம் இம்மையில் கிட்டி உறுதியா, எல்லோருமே குறையற்ற செல்வத்துடன், உடல் உறுதியோடு இன்புற்றிருந்துவர ஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆலயத்தில் பிரதிஷ்டையாகும் ஸ்ரீ ஸ்ரீ மாதா காயத்ரீ தேவியாகுமென்பதையெல்லாம் சத்குரு ஸ்வாமிகளவர்கள் நம்புவதாயும், ஸ்ரீ காயத்ரீ உபாஸனையின் மஹிமை அளவிடற்கரியதென்றும், ஸ்ரீ ஸ்ரீ காயத்ரீ மஹா மந்திரம் வேத ஸாரமானதாகுமென்றும், ஸ்ரீ ஸ்ரீ காயத்ரீ மந்திரத்திற்கு மிஞ்சிய மந்திரமே உலகில் இல்லை என்பதினால் ஸ்ரீ ஸ்ரீ காயத்ரீ பராம்பிகையானவளும், ஒவ்வொருவருடைய உயிருக்கு உயிராகவும், அழிவற்ற அறிவாகவும் ஆத்மாவாகவுமே

இருந்துவரும் ஸ்ரீ ஸ்ரீ காயத்ரீ தேவியின் பிரதிஷ்டையானது கிடைத்தற்கரியது என்றும், ஸ்ரீ ஸ்ரீ சத்குரு ஸ்வாமிகள் தெரிவித்தும் சந்தோஷப்பட்டும், ஸ்ரீஸ்ரீ காயத்ரீ தேவியின் மகத்தான மகிமைகளேயும் அளவிட முடியாத அபார சக்தியை எல்லாம் நொடிக்கு நொடி ஸ்ரீமத் சத்குரு ஸ்வாமிகளவர்கள் நினைத்துப் போற்றிப் புகழ்ந்து பூரித்துள்ள விசயங்களேயும் அடியேன் பணிவன்புடன் பெருமதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய ஸ்ரீ காயத்ரீ சித்தரான ஆர். கே. முருகேசு சுவாமிகளவர்களிடம் தெரிவிக்கச் சொன்னதையும் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்வதாவது.

ஸ்ரீ ஸ்ரீ காயத்ரீ தேவியின் பிரதிஷ்டையினுலும் ஸ்ரீ காயத்ரீ ஜெபத்தினுலும், ஸ்ரீ காயத்ரீ பூஜையினுலும், ஸ்ரீ காயத்ரீயின் மஹா மஹிமைகள் நிறைந்த மந்திரஹோமத்தினுலும், மக்கள் அனைவருக்கும் பொறுமையையும், மனுேதைரியத்தையும், உறுதியான மன அமைதியையும் உண்டாக்கி வைப்பதுடன், அறிவை, ஆத்மாவை மறைக்கும் அழுக்குகளேயும், பேராசைகளேயும், அறவே துடைத்துக்களேந்து இரட்சிக்கக் கூடியவள் ஸ்ரீ ஸ்ரீ காயத்ரீ தேவியான மஹா சக்தியானவள் என்றும், பற்றையும், பயத்தையும் (அஞ்ஞானத்தையும்) அறவே போக்கிடவல்ல ஸ்ரீ காயத்ரீ மஹா மந்திரத்தின் மஹிமை சொல்லுக்கடங்காதது ஆகுமென்றும், அபிஷேகம், அல்லது அவித்யை எனப்படும் அழுக்கை அறவே துடைக்கவல்ல மஹா மந்திரமான ஸ்ரீ காயத்ரீ பூஜைகளேச் செய்துவரும் ஸ்ரீ காயத்ரீ சித்தரான ஆர். கே. முருகேசு சுவாமிகளவர்கள், எந்தவிதமான சுயநல நோக்கமும் இல்லாமல் தேசத்திற்குப்பாடுபட்டு வரும் உயர்ந்த தொண்டானது. போற்றுதற்குரியது என்றும், அச்சமற்றவரும் நெஞ்சுரமிக்கவரும், தெய்வ கைங்கரியத்தை நிஷ்காமனேயுடன் உறுதியாக செய்து வருகிற உத்தமோத்பரும், தமது நாட்டில் உள்ள மக்கள் சஞ்சலம் நீங்கி சாந்தியுடன் குறையற்ற செல்வத்தோடு இன்புற்றிருந்து வருவதற்காகவே ஸ்ரீ இலங்கைதீவில், ஸ்ரீஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆலயத்தில் ஸ்ரீ ஸ்ரீ காயத்ரீ தேவியின் பிரதிஷ்டையைச் செய்வதானது, உலகிலுள்ள ஒவ்வொரு மக்களுக்கும் மேலான நன்மையை உறுதியாக உண்டாக்கி வைக்குமென்பதில் சந்தேகமில்லே என்பதையெல்லாம் ஸ்ரீ ஸ்ரீ சத்குரு சாந்தானந்த ஷ்வாமிகளவர்கள் விஷேசமான அருளாசிகளுடன் தெரிவிக்கச் சொன்ன அனைத்தையுமே பணிவன்புடன் பெருமதிப்பிற்கும் மரியாதைக்கும் உரியவரான ஸ்ரீ ஸ்ரீ காயத்ரீ சித்தரான ஆர். கே. முருகேசு சுவாமிகளவர்கள் சமூகத்தில் மேலும் பணிவன்புடன் தெரிவிக்கலாஞேம்.

இப்படிக்கு,

ஸ்ரீமத் சத்குரு
சாந்தானந்த ஸ்வாமிகளவர்கள்
ஆக்ஞையின்படி
எஸ். ராமமூர்த்தி

OM
SRI JYOTIRMATH



HIS HOLINESS
JAGADGURU SHANKARACHARYA
SHRIMAD JYOTHISH PITHADHISWAR

# SWAMI SHANTANANDA SARASWATIJI MAHARAJ


## *Message with Blessing*

---

On this occasion of Mahakumbhabhisekam of Sri Gayatri Peetham at Nuwara Eliya, Sri Lanka — may it bring all the peace and happiness to every individual residing at Sri Lanka. May this consecration ceremony uproot all the differences and usher all the noble thoughts and bind everyone with love and affection. Let every one here introduce themselves first as a man and irrespective of differences and contradictions embrace each other as their own self.

With Blessings

Varishtha Jyotish Peethadhishwar
Jagadguru Shankaracharya Sree
SWAMI SHANTANANDA SARASWATIJI
Jyotir Mutt
Badrikashram
Himalayas.



# மாமகரிஷி ஈஸ்வரப்பட்டர்

---

சூக்ஷ்ம சரீரத்தில் தோன்றி அருளிய ஆசிச்செய்தி.

ஸ்ரீ இலங்காதிஸ்வரர் ஆலயம்
அமைந்துள்ள இடம் மாமகரிஷிகள் நடமாடும் இடம்.

அங்கு மாமகரிஷிகளின் நாமம் சதா ஜபிக்கப்பட வேண்டும்.

அதனால் நிச்சயம் நாட்டில் சாந்தியும், சமாதானமும் தோன்றி
மக்கள் சுபீட்சம் பெறுவார்கள்.



## MESSAGE FROM:
## SRI SHIVA BALAYOGI MAHARAJ

Great spiritual Force behind all Existence. It creates sustains and destroys all the manifested world. Human being is also supported and movedbythe same Force,from behind, in all his activities. His ignorance and ego however interfere with the action of this Great Spiritual Force. Consequently he and this world get distorted and aberrations set in leading to sorrow and misery. He requires, therefore,chances and places which he can visit to bring him back on the track, Temples, Churches, Mosques and Aramas have provided since ancient days such rendezvous where he can get into communion with the Divine and recharge himself with the Divine Spiritual Force.

Lord Shiva is the Yogeswara,

The Lord of all Tapas, all effort to realise Truth. A temple dedicated to Him can give all those who approach and visit with faith and devotion, the needed support and succour to act and live in this troubled world'

Temples are dedicated by Maharishis as concentrations of Divine Spiritual Forces. Visits to these can help the human being to realise and come back onto the path of Truth.

May LANKADHEESHWARA bless His devotees and the world with peace and prosperity.

**Sri Siva Bala Yogi Maharaj**

# தவத்திரு. கன்னியப்ப சுவாமிகளின் நல்வாழ்த்து

அன்புநிறை சுவாமி முருகேசு அவர்கட்கு,

இலங்கையில் முதலாவது காயத்ரீ ஆலயம் அமைத்து ஸ்ரீ காயத்ரீ தேவியை பிரதிஷ்டா செய்து கும்பாபிஷேகம் செய்யும் தங்களுக்கும் இலங்கை வாழ் மக்கள் அனைவருக்கும் எனது உணர்வு நிறைந்த இதயம் கலந்த, மனப் பூர்வமான நல்வாழ்த்துக்கள். உரித்தாகுக, உலகம் எங்கும் அன்பும் அமைதியும் இறையுணர்வும் நிலவுவதாகுக.

இலங்கை மக்கள் அனைவரும் புறவுணர்வு நீங்கி, அகமெய்யுணர்வும், நிலையான அமைதியும் பெற்று, நல்லின்பத்தோடு நாளும் வாழ்வதற்கு இதற் கென்றே தாங்கள் கேட்டுள்ளவாறு, எமது மெய்கண்ட ஞான சபையின் மெய் யுணர்வாளர்கள் எல்லோரும். ஒன்று கூடி. எண் 14, டெலிகிராப் அபாய் நாயுடு சந்து, சென்னை - 1ல் உள்ள எமது இல்லத்தில், தினமும் மாலை ஏழு மணியள வில் பன்னிரண்டு நாட்களுக்குத் தவம்மெய் இறையுணர்வுத்தவம் இயற்றுவர், யாமும் இயற்றுவோம் என அறிக.

இலங்கை வாழ் மக்கள் அனைவரும் நிலையான அமைதியும் இன்பமும் பெற்று நெடிது வாழ, எமது மெய்யுணர்வின் நல்வாழ்த்துகளைத் தங்களுக்கும், இலங்கைவாழ் மக்கள் அனைவருக்கும் என்றும் உரித்தாக்குகின்றோம்.

இங்ஙனம்
தங்கள் அன்புப் பூங்காவில் பூத்தமலர்
**தவத்திரு. கன்னியப்ப சுவாமிகள்**

மெய்கண்ட ஞான சபை
14, டெலிகிறுப் அபாய் நாயுடு சந்து,
சென்னை-1



## டாக்டர், பண்டிட்
# ஸ்ரீ கண்ணையா யோகியின் வாழ்த்துரை

காயத்ரீ மிகப் பழங்கால முதல் ரிஷிகளின் சக்திக்கு ஆதாரமான சாதனையாயிருந்து வருகிறது. ரிஷிகளின் ஆக்கங்களின் மறைவில் இந்த உண்மை பொதிந்திருக்கிறது யோக வாசிஷ்டத்தின் ஒவ்வொரு உபதேசத்தின் மறைவிலும் காயத்ரீயின் தன்மை அடங்கியிருக்கிறது.

புற்றால் மூடப்படும் அளவுக்குத் தவத்தைச் செய்த வால்மீகி முனிவருக்கு காயத்ரீ தத்துவம் தெரியாமல் இருக்குமா? நாரதர் வால்மீகிக்கு ராம மந்திரத்தை மட்டுமா, ராம காதையை மட்டுமா உபதேசித்தார்? இல்லாவிட்டால் வேடுவ இனத்தவரான வால்மீகி மிகப்பெரிய ராமாயணத்தைச் செய்திருக்க முடியுமா? அவர் ராம காதை செய்தது காயத்ரீ சக்தியால்தான். வேறு வகையில் அவருக்கு ராமாயணம் செய்யும் திறமை வந்திருக்க முடியாது.

வால்மீகி 24 ஆயிரம் சுலோகங்களில் ராமாயணம் பாடியிருக்கிறார். தற்போதைய பல பதிப்புகளில் இக்கணக்குக் கூடியும் குறைந்தும் காணப்படுகின்றன. இதற்குக் காரணம் அந்நிய ஆட்சியின்போது நடந்த இடைப்பிரிவு, இடைச்செருகல். இது எல்லா நூல்களிலும் காணக்கிடைக்கிறது மூலமான வால்மீகி ராமாயணம் 24 ஆயிரம் சுலோகங்களைக் கொண்டதுதான்.

வால்மீகி ஏன் 24 ஆயிரம் சுலோகங்களில் ராமாயணத்தைச் செய்தார் என்பதில் ஓர் ரகசியமுண்டு. அவர் காயத்ரீ மந்திரத்தின் ஒவ்வொரு எழுத்துக்கும் ஓராயிரம் சுலோகமாக 24 எழுத்துகளுக்கு 24 ஆயிரம் சுலோகங்களைச் செய்தார் என்பது ஆன்றோர் கருத்து. காயத்ரீ மந்திரத்தின் 24 எழுத்துகள் முன்னுள்ள வ்யாஹ்ருதிகள் இல்லாமல்—தத்ஸவிதுர் வரேண்யம் பர்கோ தேவஸ்ய தீமஹி தியோ, யோ ந: ப்ரசோதயாத்—என்பவையாகும்.

இந்த ஒவ்வொரு எழுத்தை முதலெழுத்தாகக் கொண்டு ஒரு சுலோகமியற்றி, பின் அதைத் தொடர்ந்து பல சுலோகங்களை இயற்றினார். ''காயத்ரீ ராமாயணம்'' என்பது இந்த காயத்ரீயின் 24 எழுத்துகளை முதன்மையாகக் கொண்டு அமைந்த சுலோகங்களின் தொகுப்பாகும்.

இந்த சுலோகங்களின் தொகுப்பை ''காயத்ரீ ராமாயணம்'' என்று சொல்லுவதற்குக் காரணம், இந்தத் தொகுப்பு சுலோகங்களைப் பாராயணம் செய்தால் ராமாயணம் முழுவதையும் பாராயணம் செய்த பலன் உண்டாகிறது. ராம காதையை முற்றும் விளக்கமாகத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால் முழு ராமாயணத்தைப் பாராயணம் செய்தாக வேண்டும். இராமாயணத்தைப் பாராயணம் செய்த பலனை மட்டும் பெறவேண்டுமானால் ராமாயணம் முழுவதையும் பாராயணம் செய்ய வேண்டியதில்லை. காயத்ரீயின் எழுத்துக்களை முதன்மையாகக் கொண்ட சுலோகங்களை மட்டும் பாராயணம் செய்தால் போதும். இது எப்படி அமைகிறதென்றால் காயத்ரீ—

-ராமாயண சுலோகங்களைப் பாராயணம், செய்யும்போது காயத்ரீயைப் பாராயணம் செய்ததாகவும், அதே சமயம் அதன் தொடர்பால்தான் மற்ற ஆயிரம் சுலோகங்கள் உண்டாயிற்றாகையால் அவைகளின் பாராயணமும் உள்ளடங்கியதாக அமைகிறது.

பல காரணங்களால் பாரதத்தில் பழம் பெரும் தந்திர மந்திர, வேத சாஸ்திர மகிமைகளைத் தெரிவிக்காமல் எப்படியோ தமிழர்கள் வஞ்சிக்கப்பட்டவர்களானார்கள், தமிழ்ச் சங்கம் இருந்த காலத்தில் இப்பாகுபாடு இருக்கவில்லை. அச் சங்கத்தலைவர்களில் பெரும்பாலோர் நல்ல வடமொழி ஞானம் பெற்றவர்கள். வேத மந்திர ரிஷிகளில் சிலர்-தமிழர்கள். யோக நூல் ஆசிரியரான பதஞ்சலர் தமிழர் என ஓர் கருத்துண்டு. தொல்காப்பியமும் **பாணினி** இலக்கணமும் பல வகையில் ஒற்றுமையுள்ளவை.

இவ்வளவிருந்தும் இடைக்காலத்தில் வேத, மந்திர, தந்திர நூல்களைத் தமிழர்கள் படிக்கக்கூடாது என்று எப்படியோ ஏமாற்றப்பட்டுவிட்டார்கள். தமிழ் மூவேந்தர் யாகங்களைச் செய்தவர்கள். ஓர் ஆராய்ச்சியன் கருத்துப்படி பாண்டியர்கள் பாண்டுவின் வம்சத்தவர்கள் என்பதுண்டு. இவ்வளவிருந்தும் இன்று சக்திவாய்ந்த மந்திர சாஸ்திரங்களில் தமிழர்களுக்கு வெறுப்பையே உண்டாக்கிவிட்டார்கள் சமயச் சுயநாலவாதிகள் தமிழர்களுக்கு வஞ்சிக்கப்பட்ட இச்சாத்திரங்களை இன்று ஜெர்மனி, அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாட்டு மக்கள் ஆராய்ந்து, பயின்று, விஞ்ஞானம் முதல் அரிய நன்மைகளைப் பெற்றுவருகிறார்கள். 64 கலைஞானம் ஜெர்மனியில் இருக்கின்றன. நான்கு வேதங்களின் 'மூலம்' ஜெர்மனியில் தான் இருக்கிறது. ஆரிய சமாஜ் ஸ்தாபகர் ரிஷி தயானந்தர் அவற்றைக் கேட்டுப்பெற்று மறுநகல் எழுதிக்கொண்ட பிறகு தான் நம்பாரத்தில் நான்கு வேதங்களும் முழுமையாகக் கிடைக்கத் தொடங்கின. இந்த நிலையில் பிரபஞ்சமனைத்தையும் ஆக்கியமைத்தளிக்கும் மகா-சக்தி ஸ்ரீ காயத்ரீ உயர் தீட்சைபெற்று இடையறாது உபாசனை செய்து அரும்பெரும் சித்திகளைப்பெற்று பிறவியின் குறிக்கோள் பெற்ற அருட்திரு முருகேசு சுவாமிகள் இலங்கையில் ஸ்ரீ காயத்ரீ தேவிக்கு முதலாவது ஆலயம் அமைத்து தேவியை பிரதிஷ்டை செய்வது-குறித்து எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதோடு ஸ்ரீ முருகேசு சுவாமிகளின் முயற்சி பரிபூரண வெற்றிபெற்று இலங்கையில் சாந்தியும் சமாதானமும் நிலவிடப் பிரார்த்திக்கிறேன்.

**யோகி, கண்ணையா**
ஆத்மயோக ஞானசபா,
சென்னை.

**காயத்ரீ ஜெபத்தால் பாவங்கள் விலகும் சுவர்க்க சுகம் கிடைக்கும், மோட்சமும் கிடைக்கும், அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கு பேறுகளும் புருசார்த்தங்களும் கிடைக்கும்.**

**—காயத்ரீதாசர்**

# THE DIVINE LIFE SOCIETY

P. O. SIVANANDA NAGAR,
Via, Rishikesh
Himalaya.
14- 4- 1963



**Founder President**
**Sri Swami Sivananda**

ஸ்ரீ சிவானந்தம் முருகேசு,
கொழும்பு,

ஆன்மீக அருளொளிச் சுடரே,

ஓம் நமோ நாராயணாய.

தங்களுக்கு ஆண்டவன் அருள்நிறைய இருக்கிறது. தங்களுடைய முயற்சியால் இன்று 10 லட்சம் மக்களுக்கு பாபத்தைப் போக்கும் பாவன நாமம் நாவிற்கிட்டியது, மலைநாட்டில் தியான ஜெபம் கீர்த்தனை நடத்துங்கள் மலைநாடு சிவபெருமான் குடிகொண்டிருக்கும் திருநாடு ஆண்டவரை அடைய தம்பிக்கை பிரதானமானது.

மலை நாட்டில் ஆஸ்ரமம் அமைக்க தாங்கள் செய்யும் முயற்சி வெற்றிபெற பிரார்த்தனை செய்கிறேன். எல்லாம் வல்ல சிவபெருமான் தங்களுக்கும் மலையக மக்கள் அனைவருக்கும் நீண்டாயுளும் தேகாரோக்யத்தையும் மன அமைதியையும் கொடுத்து ஆசீர்வதிப்பாராக.


தங்கள் சொந்த ஆத்மா,
**சிவானந்தா**

குறிப்பு:- மலையகத்தில் ஆஸ்ரமம் அமைக்க பகவான் சிவானந்தர்
1965ம் ஆண்டு சுவாமி முருகேசு அடிகளாருக்கு அனுப்பிய ஆசிச்செய்தி.

# *Message*

*from*

# *Swami Purnananda Giri*



Phone No: 354
Sri Rajarajeswari Alayam,
Nagalur Road,
Yercaud - 2,
Salem Dt.,
Tamil Nadu.

I am glad that a souvenir is brought out on the occasion of Mahakumbhabhisekam Ceremony of Gayatri Peetham at Nuwara Eliya.

I fervently offer my prayers to Devi Gayatri that Sri Lanka be enveloped with incessant peace and prosperity and let every individual be showered upon with the choicest blssings of Devi Gayatri.

It is Swami Murugesu who is the architect of the entire plan and after engaging his sincere efforts he could install Devi Gayatri with Swayombhu Sri Lankadheeshwarar already consecrated here, it is a great achievement and thus the people of Nuwara Eliya and Sri Lanka is bestowed with a rare privilege of worshipping Devi Gayatri and Sri Laukadheeshwarar in the same premises.

Swami Murugesu, his disciple and the people of Nuwara Eliya and to those who gave a total shape to this Adhishthanam — my best wishes to all and may this consecration ceremony bring noble thoughts from every side.

With Blessings

Yours Ever

SWAMI PURNANANDA GIRI

# *Message from*
*His Excellency*
# *The*
# *High Commissioner*
# *for India*



COLOMBO,
SRI LANKA.
August 22, 1986

I was very happy to hear that a statue of Goddess Gayathri is to be installed at the Sri Lankatheeswarar Temple, Nuwara-Eliya, on the 11th of December 1986. It is also gratifying to note that the installation of the statue will be done by a disciple of a well-known Indian Swami.

The Gayathri Manthra is one of the holiest and most efficacious Manthras in the Hindu scriptures, The merit gained through a regular recitation of this Manthra is said to dispel fear, remove sorrow and lead to the attainment of SATCHITANAND. Not only has the Gayathri Manthra been an inalienable part of the Samskaras or sacraments of the old Indian tradition but this invocation of Goddess Gayathri is the seeking of an inward illumination. May the image of Goddess Gayathri illumine the inner lights all those that worship 'HER'

Last month I had the pleasure and privilege of visiting the International Meditation Centre and the Sri Lanka-India Cultural Hall as well as paying obeisance at the Sri Lankatheeswarar Temple. I saw that Swamy Murugesu and the other trustees of the Sri Lankatheeswarar Temple are indeed attempting not only to meet The spiritual needs of the people of Nuwara-Eliya but also weave a fabric of religious harmony. They seem to be faithfully carrying out the Rig Vedic injunction "Assemble" discuss with one another! Let the pure minds be of one accord! A common purpose do I lay before you. Common be your aims and your hearts be united! May there be perfect accord." (Rig Veda X - 191 - 2 to 4)

On this occasion, I convey my good wishes for the success of the function and express the hope that the Sri Lankatheeswarar Temple and its allied institutions will grow from strength to strength.

Sgd.
**J N DIXIT**
High Commissioner



ஸ்ரீ சிவபாலயோஹி மஹாராஜ் புனித நர்மதையில்
இரண்டாவது தடவையாக கண்டெடுத்த
பசுபதீஸ்வரர் சிவலிங்கம்
ஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆலயத்தில் வழிபாடு செய்யப்பட்டு வருகிறது.

# *Message from the Hon. Minister of Finance & Planning, Sri Lanka.*



It gives me great pleasure to send a message of good wishes to commemorate the installation of the Statue of the Goddess Gayathri in your temple.

Today our country witnesses bitter civil strife which is threatening to tear us apart. Such strife and hatred promises us nothing but destruction and moral and economic collapse. Therefore, it is the duty of leaders of every community and religion to inculcate into the minds of every man, woman and child in this country the need for unity, fellowship and peace. We must not forget that all human beings are one, irrespective of race, caste, creed and religion.

I am happy to note that the Shri Lankatheeswarar Temple of Nuwara Eliya is actively promoting peace and harmony in the country. Peace is something which has often been preached but seldom practised throughout the ages. Therefore every effort, however small, towards the establishment of peace must be lauded.

I wish you every success in all your endeavours.


RONNIE DE MEL
Minister of Finance & Planning.



# ஸ்ரீ தர்மானந்த சுவாமிஜி

**கேரளா**

அணிமாதி அஷ்டசித்திகளைப் பெற்ற இவர் சுவாமி முருகேசு அவர்களின் சீடர் ஸ்ரீமதி சீதா பாபு மூலம் ஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆலயம் அமைக்க ஆசி வழங்கியுள்ளார். மகா காளி உபாசகராகிய இவரின் அருளாசியினுல் கேரளாவிலிருந்து மகா காளி விக்ரகம் கொண்டுவரப்பட்டு பிரதிஷ்டை செய்யப்படவிருக்கிறது.



# The Message from

# Hon. Mr. Gamini Dissanayake

*The Minister of Land, Land Development, and Mahaveli Development.*

It gives me great pleasure to give this Message to the DEVOTEES OF SHRI LANKADEESWARAR TEMPLE-NUWARA-ELIYA, for the Consecration Ceremony of Goddess Gayathri.


I am aware that Swamy MURUGESU has rendered great service in this temple and has won the hearts and minds of all Communities. As a result Shri. LANKADEESWARAR TEMPLE has become a Truly International Place of Worship.

At a time when our Government and the Government of India is endeavouring to bring back peace and a settlement to the Ethnic problems, we pray to Goddess Gayathri to make our efforts to success and bring permanent peace to Our Motherland.

I am told that this is the First Shrine of all powerful Goddess Gayathri in the island.

I am pleased that it is situated in Nuwara-Eliya.

**Gamini Dissanayake**




## ஸ்ரீ லூயிஸ் கொன்லெக்

அமெரிக்காவில் வாழும் இவர் சுவாமி முருகேசு அவர்களிடம் காயத்ரீ தீக்ஷைப் பெற்று, சாதனை செய்து சித்தி பெற்றவர்.

## *Sri Louis Gonlag (U. S. A.)*

WHO WAS INVITED INTO GAYATHRI
BY SWAMI MURUGESU



# கௌரவ அமைச்சர் சௌ. தொண்டமான் அவர்களின் வாழ்த்து

நுவரெலியா ஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆலயம், மலையக மக்களுக்குப் பலன் எதிர்பாராது ஆற்றி வரும் ஆன்மீக சேவை மகத்தானது. இவ்வாலயத்திற்கு நான் பல தடவைகள் விஜயம் செய்துள்ளேன். இங்கு, சுவாமி முருகேசு அவர்களின் தலைமையில் புனிதம் பாதுகாக்கப்பட்டு, சாஸ்திர முறைப்படி, அமைதியாக, பக்திமயமாகப் பூசைகள், வேள்விகள் நடத்தப்படுவது பாராட்டுக்குரியது.

மாபெரும் தவமுனிவர் ஸ்ரீ சிவபாலயோகீஸ்வரர் புனித நர்மதா நதியில் தனக்குக் கிடைத்த சக்திவாய்ந்த ஜோதிர் லிங்கத்தை ஸ்ரீ இலங்காதீஸ்வரர் என்ற நாமம் சூட்டி, அவரின் திருக்கரங்களினாலேயே பிரதிஷ்டை செய்தது மலையக மக்கள் மட்டுமன்றி இலங்கை வாழ் மக்கள் அனைவரும் செய்த தவப்பயனே ஆகும்.

மேலும், மேற்படி ஆலய ஸ்தாபகர் சுவாமி ஆர். கே. முருகேசு அவர்களின் முயற்சியால், இலங்கையிலேயே முதலாவது ஸ்ரீ காயத்ரி ஆலயம் அமைத்து தேவியைப் பிரதிஷ்டை செய்து, மாமுனிவர்களின் அருளாசியுடன் கும்பாபிஷேக விழா நடத்தவிருப்பதும் நாம் செய்த புண்ணியமே. இந்த மகத்தான தெய்வத் திருப்பணி சீருற்ற நிலைமையில் சிறப்புப் பெற்று, பரிபூரண வெற்றி எய்தி, அனைவருக்கும் அன்னை காயத்திரியின் அருள் கிட்டி, இலங்கையில் சஞ்சலம் நீங்கி, சாந்தி நிலவ அன்னை ஸ்ரீ காயத்ரி தேவியைப் பிரார்த்திக்கிறேன்.

சௌ. தொண்டமான்
*கிராமிய தொழிற்றுறை அபிவிருத்தி அமைச்சர்.*



**SRI SIVABALAYOGI MAHARAJ**
WITH THE SIVALINGAM DISCOVERED BY HIM
IN THE SACRED RIVER NARMADA.

*With Best Compliments from :-*

*S. Puspanathan*

No. 11/12, TEMPLE STREET,
COLOMBO—10.

# கௌரவ அமைச்சர்

# செ. இராசதுரை அவர்களின்

# வாழ்த்து



தவத்திரு ஸ்ரீ சிவபால யோகீஸ்வரர் அவர்களைத் தரிசனம் செய்த பொழுது "சுவாமி, பாரத புண்ணிய பூமியில் பாய்ந்தோடும் புனித நர்மதா நதியில் தங்கள் கரங்களிற் கிடைத்த சுயம்பு ஜோதி லிங்கத்தை நுவரெலியாவில் ஏன் பிரதிஷ்டை செய்தீர்கள்" என்று கேட்டேன்.

ஸ்ரீ சிவபால யோகீஸ்வரர் வழமையான நெஞ்சையள்ளும் புன்னகை புரிந்து "நுவரெலியா அருட்சக்தி வாய்ந்த புண்ணிய இடமாகும். அங்கு தேவர்களும் முனிவர்களும் சித்தர்களும் நடமாடியிருக்கிறார்கள். அவர்களின் திருப்பாதங்கள் நுவரெலியாவிலே படிந்திருக்கின்றன. அவர்களின் பேச்சும் மூச்சும் இன்னும் அந்த இடத்திலே சஞ்சரித்துக் கொண்டிருக்கின்றன" என்று பதிலளித்தார். கற்பின் தெய்வமான சீதை, நுவரெலியா என்று இன்று அழைக்கப்படுகின்ற இடத்திலே தான் இராவணனால் சிறை வைக்கப்பட்டிருந்தாள் எனக் கர்ண பரம்பரைக் கதைகள் இருக்கின்றன. தெய்வீக அவதாரமான இராமன் திருவாட்டி சீதா சில காலம் இருந்ததினால் அந்தப் பகுதி புனிதத்துவம் அடைந்துவிட்டது. அருள்மிகுந்த இந்த இடத்தில் அண்டசராசரங்களின் ஆதி கர்த்தாவாகிய அன்னை பராசக்தியின் ஆலயம் அமைக்கப்பட இருப்பது பெரும் பாக்கியமாகும். அன்னை ஸ்ரீ காயத்திரியின் ஆலயம் அங்கு அமைவது ஒரு அதிஷ்டமாகும்.

ஸ்ரீ கண்ணபிரான் கீதையில் ஒரு இடத்தில் "வேத மந்திரங்களில் நான் காயத்திரியாக இருக்கின்றேன்" என்று திருவாய் மலர்ந்துள்ளார். காயத்திரி மந்திரம் வேதங்கள் நான்கிலும் தாய் போன்றது. அருட்சக்தி வாய்ந்தது. எல்லா நலன்களையும் அள்ளித்தரும் ஆற்றல் படைத்தது.

பாரத நாட்டில் தோன்றிய ராஜரிஷி விசுவாமித்திரர், பாரதம் அருளிய வியாச முனிவர் போன்ற மகரிஷிகளும், மகாத்மா காந்தி, இராமகிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர், சங்கராச்சாரிய சுவாமிகள் போன்ற மகான்களும், காயத்திரியின் மகத்துவத்தை அறிந்து அதனுள் தம்மை யாக்கி அரும்பெரும் காரியங்களைச் சாதித்திருக்கிறார்கள்.

அன்னை ஸ்ரீ காயத்திரி தேவிக்கு ஆலயம் அமைக்கும் அரும் பணியினை ஸ்ரீ ஆர். கே. முருகேசு அவர்கள் மேற்கொண்டிருப்பது மன நிறைவைத் தருகின்றது. மகான்களையும், சித்தர்களையும், புண்ணியசீலர்களையும், புனித இடங்களையும் தரிசித்தும் அவர்களுடைய அருள்மொழிகளையும் ஆசிகளையும் பெற்றும் அப்பெருமக்கள் வாழுகின்ற இடங்களில் வாழ்ந்தும் வந்துள்ள அருட்செல்வர் ஆர். கே. முருகேசு அவர்கள் ஆற்றும் பணி காலத்தால் அழியாதது.

தேவி காயத்திரியின் அருட் கடாட்சம் நாட்டுக்கும் அகில உலகுக்கும் கிடைக்கப் பிரார்த்திப்போமாக! அமைதியும், சாந்தியும், சமாதானமும் சர்வ உலகிலும் நிலைப்பதாக!

அன்பன்

செ. இராசதுரை

பிரதேச அபிவிருத்தி அமைச்சர்

14.11.1986



பாட்டியாலா ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவரும், 185 வருடங்கள் உக்கிர பஞ்சாக்னி தபஸ் செய்தவரும் ஸ்ரீ சிவபால யோகீஸ்வரரின் தபஸ் காலத்தில் அவருக்கு வழிகாட்டியாக இருந்தவருமான **ஸ்ரீ தபஸ்வி மகராஜ்.** இவர் சூக்ஷ்ம சரீரத்தில் அடிக்கடி ஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆலயத்திற்கு விஜயம் செய்து சுவாமி முருகேசு அவர்களோடு ஆத்ம சம்பாஷணை நடத்தி வருகிறார்.

ஸ்ரீ தபஸ்வி மகராஜ்

ஸ்ரீ பூண்டி மகான் - ஓடும் நதிக்குள் இருந்து பல நூற்றாண்டு காலம் கடும் தவம் புரிந்தவர் - சுவாமி முருகேசு அவர்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டு அருளாசி வழங்கியவர். சில வருடங்களுக்குமுன் மகான் சமாதியடைந்ததும் - தப சரீரத்தில் சுவாமி முருகேசு அவர்களோடு, தொடர்பு கொண்டுள்ளார்.



ஸ்ரீ பூண்டி மகான்



ஸ்ரீ மாயிமாதா - சுமார் 300 வருடங்களுக்கு மேல், கன்னியாகுமரியில் ஜீவப் பிரம்ம ஐக்கிய நிலையில் வாழ்ந்து வருகிறார். சுவாமி முருகேசு அவர்களிடம் ஆத்மீக தொடர்பு வைத்துள்ளார். இவரை தரிசிப்பவர்கள் பாக்கியசாலிகள்.

மாயிமாதா

# ஸ்ரீ இலங்காதீஸ்வரர்

# ஆலய வரலாறு

இந்துக்களின் வாழ்க்கை சமயத்தையே அடிப்படையாகக் கொண்டு அமைந்தது. இத்தகைய சமய வாழ்க்கை ஆலய வழிபாட்டோடு தொடர்புடையதாக விளங்குகின்றது. இலங்கையில் ஐந்து பழைமை வாய்ந்த சிவாலயங்கள் வட, கிழக்கு, வட மேற்குக் கரையோரப் பகுதிகளில் அமைந்துள்ளன. இவ்வைந்து ஆலயங்களோடு இன்று நுவரேலியாவில் அமைந்துள்ள ஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆலயமும் மிகச் சிறப்பு மிகு ஆலயமாகக் கணிக்கப்படுகின்றது. இவ்வாலயம் நுவரேலியாவில் 82, லேடி மெக்கலம்ஸ் ட்ரைவில் அமைந்துள்ளது. இவ்வாலயத்தின் சிறப்புக்கும், பெருமைக்கும் காரணம் இவ்வாலயம் இலங்கையின் மத்திய மலைப் பிரதேசத்தில் அமைந்துள்ளமையே. இத்துடன் இவ்வாலயம் சரித்திரப் பிரசித்தி பெற்ற ஆலயமாகும். இவ்வாலயம் அமைந்துள்ள பகுதி முன்னொரு காலத்தில் இலங்கையை ஆட்சிபுரிந்த இராவணனது இராசதானியாக இருந்ததாக அறிஞர்கள் கூறியுள்ளனர். இராவணன் ஓர் சிறந்த சிவ பக்தனாக இருந்து சிவலிங்கத்தை வணங்கிப் பூசை செய்து வந்தான். அவன் வழிபட்டு வந்த சிவலிங்கம் இன்று ஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆலயத்தில் காணப்படும் சிவலிங்கத்தைப் போன்றதாகும். இச் சிறப்புமிகு சிவலிங்கத்தை (தான்தோன்றிய) ஸ்ரீ சிவ பால யோகி என்னும் தபசி பன்னிரண்டாண்டு கடும் தவத்தின் பின் வட இந்தியாவில் உள்ள நர்மதா என்னும் பரிசுத்த நதியில் கண்டெடுத்து எத்தனையோ பேரின் எதிர்ப்புக்கு மத்தியிலும் இலங்கைக்கு கொண்டு வந்தார்கள்.

இவ்லிங்கத்தை தற்போது அமைந்துள்ள இடத்தில் வைத்துப் பூஜை செய்து ஸ்ரீ சிவ பால யோகி மகரிஷி வானொலிமூலம் பேச்சொன்றை நடத்தினார். அப்பேச்சின் மூலம் நாம் அறியக் கூடியதாக அமைந்தது என்னவெனில் இலங்கையை ஆண்ட இராவணனின் மகனாகிய மேகநாதன் தன் தந்தைக்கு சகல நற்பலன்களும் வேண்டி தற்போது அமைந்துள்ள ஆலயத்தின் பகுதியில் சிவலிங்க வழிபாட்டைச் செய்தான். மேகநாதனின் பக்திப் பரவசத்தின் மகிமையை வியந்து மும்மூர்த்திகளான பிரமா, விஷ்ணு, சிவன் மேகநாதனின் முன்தோன்றி அவனை ஆசீர்வதித்தனர். இவர்களின் தோன்றலினாலும், ஆசீர்வாதத்தாலும், அருளினாலும் இவ்விடம் புனிதத்தன்மை அடைந்து பிரகாசித்தது. இப்பேர்ப்பட்ட இடம் மானிடர்களினால் என்றும் அழித்தொழியமாட்டாது. மனிதர்கள் வாழ்வதற்கே மிகவும் புனிதத்தன்மை வாய்ந்ததாகும். இவ்விடத்தில் முதல் முதலில் குடியமர்ந்தவர் லெஜிஸ்லேடிவ் கவுன்ஸிலின் முதற் சபாநாயகராக அமர்ந்திருந்த பெருமகன் ஒருவராவர், இவரைத் தொடர்ந்து அநேகர் இவ்விடத்தில் வாழமுற்பட்டனர். ஆனால் எவரும் இவ்விடத்தில் அநேக காலம் வாழ முடியவில்லை. இவ்விடம் 40 ஆண்டுகள் எவரும் அணுக முடியாத, வாழ முடியாத பேய் பிசாசு நடமாட்டம் உள்ள இடமாக இருந்தது. மனித நடமாட்டமில்லாத இவ்விடத்திற்கு ஸ்ரீ முருகேசு சுவாமி தனது பக்திப் பெருமையினாலும், தவ வலிமையினாலும், ஆன்மீக ஆற்றலினாலும் இவ்விடத்தில் வசிப்பதற்காக 1975ம் ஆண்டு வந்தார். இப்பகுதியில்தான் 1978ம் ஆண்டு 16ம் திகதி ஐப்பசி மாதம் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

சிவலிங்க பிரதிஷ்டை ஸ்ரீ சிவ பால யோகியின் மேற்பார்வையில் ஸ்ரீ முருகேச

சுவாமி ஸ்ரீபதி சீதாபாபு ஆகியோரின் விடா முயற்சியினால் சிறப்பாக நடைபெற்றது. இவர்களின் ஆதரவும், அன்பும், ஆண்டவனின் கிருபையும், அனுக்கிரகமும் இல்லாவிடில் இவ்லிங்கம் இவ்விடத்தில் அமைந்திருக்க முடியாது.

இச்சிவலிங்கத்தை அமைத்த பின்னர் சிவ பாலயோகி, சீதாபாபு ஆகியோர் தமது தியானத்தினாலும், பிரார்த்தனையாலும், இவ்லிங்கத்தை பரிசுத்தம் பெறச் செய்தனர். சீதாபாபு 34 நாட்களாக அமைதிபேணி பால் பழத்தை உட்கொண்டு வாழ்ந்தார்.

இன்று இவ் இலங்காதீஸ்வரர் ஆலயம் மிகவும் பிரகாசமாகத் திகழ்ந்து அடியார்களுக்கு அருள்பாலிக்கின்றது. ஒரு காலத்தில் மனித நடமாட்டமில்லாமல் இருந்த இவ்விடம் இன்று சமய, கலாச்சாரப் பண்புகளோடு தெய்வீகத்தன்மை பொலிந்து காணப்படுகிறது. இதற்குக் காரண கருத்தாவாக வாழ்ந்தவர் ஸ்ரீ முருகேசு சுவாமி என்றால் மிகையாகாது. அதற்காக நாம் அவரைப் பாராட்டாமலும் இருக்க முடியாது. இன்று இவரின் மேற்பார்வையில், பிரார்த்தனைகளும், பூஜைகளும், சகல திருத்தொண்டுகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

உலகில் நானா பகுதியிலுமிருந்து பக்தர்கள் சாதி, மத பேதமின்றி ஒன்று திரண்டு இவ்வாலயத்திற்கு வந்து ஆலய வழிபாடு செய்து ஆண்டவன் திருவருள் பெற்றுச் செல்கின்றனர். இவ்வாலயத்தில் நடைபெறும் அற்புதத்தையும் அவர்களால் நேரில் கண்டு, உணர முடிகிறது. நடு மதியத்திற் இவ்லிங்கம் அமைக்கப்பட்டமையினால் அச்சமயம் லிங்கத்திற்கு பூஜை நடைபெறுகின்றது. பூஜை நடைபெறும் தருணத்தில் மழை பெய்து வீட்டு முகட்டில் விழுவது போன்ற சத்தத்தையும், லிங்கத்திலின்று கசியும் வியர்வையையும் நாம் அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. இத்துடன் இவ் லிங்கம் நாளுக்கு நாள் வளர்வடைவதையும் பக்தர்கள் அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. இவை எல்லாம் இவ் வாலயத் தலத்தில் நடைபெறும் அற்புதங்கள் ஆகும்.

இவ்வாலயம் அமைந்திருக்கும் சுற்றுடல் மலைப் பிரதேசமாகையினால் பக்திப் பரவசம் எல்லோரிடமும் மேலோங்கி நிற்பதை நாம் காண முடிகிறது.

மேலும் இவ்வாலயத்தில் பிரதிஷ்டை செய்வதற்கென, தமிழகத்திலிருந்து ஸ்ரீ காயத்திரி தேவி சிலையும், கேரளாவிலிருந்து தாந்திர மகா காளி சிலையும், மாமகரிஷிகளின் ஆசியுடன் கொண்டுவந்து, டிசம்பர் மாதம் 11ம் திகதி மகா கும்பாபிசேகம் நடைபெறவிருப்பது, இலங்கை மக்கள் செய்த தவப்பயனேயாகும்.

சுவாமி முருகேசு ஆற்றிவரும் ஆன்மீக சேவையால் மண்ணுலக மக்கள், அமைதி, ஆனந்தம் நிறைந்த அருள்வாழ்வாம் பெரு வாழ்வைப் பெற்று வாழ பிரார்த்திப் போமாக.

வே. சதாசிவம்
B.A., M.A. Litt., Dip. Ed., C.E.S.

# SRI LANKATHEESWARAR TEMPLE
## [ YOGASHRAM ]
# A UNIQUE PLACE OF WORSHIP

MISS. R. KANDASAMY M. A.
(SRI LANKA CORRESPONDENT FOR HINDUISM TODAY, HAWAI, U.S.A.)

THE long-felt need of a Sivan temple in the Hill Country of Sri Lanka was fulfilled in 1978 when His Holiness Swami R. K. Murugesu, founded the Sri Lankatheesvarar Temple (Yogashram) in Nuwara Eliya. Swami Sivananda of Rishikeah predicted this to him in 1963.

The five-coloured Jyotir Swayambu Lingam in the sanctum sanctorum and the deities of Goddess Gayatri and Tantra Maha Kali, brought specially from India, with the blessings of Maharishis and the Tantra Yogi of Nilgris thick jungle, South India, who had the dharshan of Maha Kali, emanate strong spiritual radiation and are full of life. This Lingam which "sweats even on a rainy day" was discovered in the holy Narmada river by Saint Sivabalayogi Maharaj, according to a vision after he completed 12 years of rigorous penance. When it was found, a shoal of fish kept guarding it, covering it completely. He named it Sri Lankatheeswarar and installed it himself in the temple. Exactly where it is now, a tapasvi performed Siva Puja, centuries ago, consecrating the place. "Bhoota Kanangal" protected it from being polluted, giving it a weird outlook, until Swami Murugesu set foot on it in 1974, to carry on his religious mission. No Wonder, this temple draws crowds, irrespective of race, religion, nationality or language and from all walks of life — from a labourer to royalty. Observers say, "Other temples attract publicity by spending lavishly on advertisement, decoration, loudspeaker and staging cultural shows for their annual festival. The absence of these is conspicuous. Yet the temple and the Swami are attracted by the public".

Swami manages the temple on "Guru - Sishya bhava". There is no till nor money kept in an "archanai thattu". Only what is offered by those dedicated to the temple and from well-wishers is accepted. For Swami, "If money comes from any evil source such as from a murderer, smuggler, black-marketeer, an egoist or one who has lust, greed, hatred anger or jealousy, it carries with it bad vibration which would spoil the sanctity of the place." Nevertheless, additional buildings like the Pilgrims Rest and the International Meditation Centre have come up, incurring vast expenses. Has anyone paused to think whether these could be achieved without Divine grace? The Divine Will prevails in whatever Swami does.

The temple strictly preserves its holiness and sanctity. Swami reminds.

often : "Come with purity and devotion I guarantee hundred per cent success in your prayers being answered." Swami performs pujas according to ancient Yoga system, with spiritual herbs brought from the holy Himalayas and other places, sanctifying them before use. Asked why a Brahmin priest does not do them he replied. "All, including Brahmins, are Sudras when they are born. They become Brahmins only after the 'Yajnopa Veeth' ceremony. As such, anyone can perform puja. One who does it with purity and bhakti is a Brahmin." When pujas take place, "Maharishis assemble in the Temple in their astral bodies and strange noises are heard on the temple roof." On Full Moon days and important religious days like the Maha Sivaratri or Navaratri, special Gayatri Yagna takes place, followed by bhajans, Swami's blessings and distribution of prasatham. People do not merely witness a puja but participate in it. Waving the lighted oil lamp, when Swami sings Upasana verses like "Accept this flame I offer you, Mother, and liberate me from the cycle of birth and death so that I could attain Moksha", the scene is so touching and the spiritual vibration so strong that the whole congregation joins in the singing and forgets itself. Swami performs puja with such intense devotion, purity and visualization "not for the granite statue but for Devi", that She surely responds. "When I saw tears in Devi's eyes", says a Buddhist devotee from Colombo, "I could not believe my eyes."

After the July 1983 holocaust, people's faith in the Temple has been increasing. Says a devotee, "There was murder and looting going on around. But of those who took refuge in Sri Lankatheesvarar, not one person was hurt." As Swamy says, "...... enmity can be controlled by sincere and devotional prayers uttered with full Bhavana."

Fifty-three year old Swami Murugesu the Enlightened Soul, does not don, saffron robes but is a Sannyasin at heart living in the midst of common people and relieving the masses from their misery, as ordered by his Guru. Though he was not brought up in a religious atmosphere, he met a sage when he was very young. "I met a Maharishi according to my Poorva Punyam — past good Karma", says he. From thence, he has been in constant touch with sages and saints. His guru is a Maharishi who lives in a hermitage in the Nilgris mountains, South India." Under his guidance, he performed Gayatri Upasana for 12 years and was blessed with Gayatri dharshan, "Whenever I wish, I have the dharsan of Devi." The Guru is everything for him. "I am only an instrument in the hands of Gurunathar, carrying out his orders. He attends to all my needs." The Kollimalai Siddhar conferred the "Gayatri Siddhar" title on him in 1971.

Most people go to him with their worldly problems. He cures Karmic diseases, whether mental or physical, using spiritual medicinal herbs taken from holy places like the Nilgris mountains getting the sufferers to pray and blessing them. Spiritual seekers are

taught Cosmo-mystic meditation and guided along the Bhakti and Yoga paths to attain Moksha in this birth itself.'' Foreigners in distant lands, receive telepathic trance initiation, if they are receptive. Those wishing to enjoy Transcendental Bliss even for months, are also given trance.


By himself associating with Maharishis, Swami has gained access to the secret science of Gayatri, Yoga, Temple-worship, Meditation, etc., etc., which hitherto lay hidden to the world. This vast store of spiritual knowledge and wealth is shared liberally for the benefit of mankind.

Such great spiritual activities in such a holy place under the guidance of such a great spiritual Master, is rare.

Blessed are those who seek him.


May Lord Lankatheesvarar and Gurudeva shower their Grace on ALL !

---



ஸ்ரீ இலங்காதீஸ்வரர்
ஆலய தோற்றம்

ஸ்ரீ இலங்காதீஸ்வரர்
ஆலய சர்வதேச
தியான நிலையம்



# காயத்ரி மகிமை

கீழ்ப் பரிணாமத்தில் உழலும் ஆன்மாக்கள் ஜட, பிராண, மானசமாகிய முப்புரங்களிலும் பரவி மாறித் திரிந்து கொண்டிருக்கும். இந்நிலையில் அவை மாயையின் கைப் பொம்மையாகவே உழன்று கொண்டிருக்கும். இவ்வோயாத சுழற்சியிலிருந்து விடுபட்டு, மேல் பரிணாமத்துக்கு செல்ல வேண்டுமானால், இம் முப்புறங்களின் அருட் சக்தியாகிய காயத்ரியின் பொருப்பில் தம் வாழ்வை ஒப்படைக்க வேண்டும். பிரபஞ்சத்தை உருவாக்கிப் பெற்றளித்த உலகை மறந்து, உள்முகப்படும் முனிவர்களுக்கு இன்ப மழை பொழியும் மேகம் போன்ற அன்னை காயத்ரி தன்னைச் சரணடைந்த ஜீவர்களை மாயைப் பிடியிலிருந்து விடுவித்து பேரின்ப பெரு நெறியில் செலுத்துவாள்.

---

பிரபஞ்சத்தின் நடுவில் அனைத்தையும் இயக்கும் செயல் சக்தியாய், சகல சிறப்புகளையும் தன் காந்த மண்டலத்திலிருந்து வெளிப்படுத்திக் கொண்டு உயிர்களின் உடலிலும் குண்டலினி சக்தியாய் ஆறாதாரங்களில் உணர்வு மயமாய் சஞ்சரித்துக் கொண்டு சித்த புருடர்களுக்கு தன் ஜோதி ஸ்வரூபத்தில் காட்சியளித்தபடி தன்னை அண்டி வரும் பக்தர்களுக்கு சகல இன்பங்களையும் கொடுப்பவள் காயத்ரி.

பிறவிப் பெரும் பிணியை அறுத்துப் பிறவாப் பேரின்பம் பெற விரும்புபவர்கள் தினமும் அதிகாலை எழுந்ததும் விழிப்படையும் மனதில் முதலில் வேறெந்த எண்ணத்தையும் பதிப்பியாமல், காயத்ரியை நினைத்துவர வேண்டும். இப்படிச் செய்து வந்தால் அவர்களை யறியாமலே சித்தத்தில் ஞான சக்தி உதித்து, வழிகாட்டி, உய்விக்கும். விரைவில் அப் பேரின்பானுபவத்தை பெற்று பெருமிதம் அடைவார்கள்.

அன்பு. இன்பம், பாசம் போன்ற சக்திகளைக் கொண்டு ஆன்ம கோடிகளைப் பரிணாமத்தில் சுழலச் செய்து கொண்டிருக்கும் காயத்ரி, அதிலிருந்து மீள்வதற்கான ஞான சக்தியையும் கூடவே வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறாள். சில காலம் வரை முன்னைய சக்திகளால் மயங்கி பரிணாமத்தில் பிறந்திறந்து, உழன்று கொண்டிருக்கும் ஆன்மாக்கள் நாளா வட்டத்தில் அம்பிகையின் ஞான சக்தியை விழிப்பிக்கச் செய்து, மாயையை அகற்றி. பிறப் பிறப்பிலிருந்து விடுபட்டு பேரின்ப வாழ்வைப் பெறுகிறார்கள்.

ஸ்ரீ காயத்ரி சித்தர்

# SPIRITUAL SIGNIFICANCE OF GAYATRI

## INTRODUCTION

Many seekers of truth know that 'Gayatri' is a great Mantra of Vedas. In India though religious sects vary, all of them recite Gayatri Mantra since it is common to all. At a very young age, a religious ceremony called "Yajnopa Veeth" i-e., wearing of sacred thread is performed, when Sandhya and Gayatri Mantra are initiated by Acharya. From then all Dwijas (Brahmins, Kshatrias, Vaisyas and Sudras also who promise to follow Vedic religion) are to perform Sandhya and Gayatri Japa daily. But nowadays nobody follows this teaching except a few orthodox followers.

Whatever it may be, all Hindus and some followers of other religions also accept that Gayatri is a great and powerful Mantra of Vedas. I came to know that a few catholics also recite Gayatri Mantra as they came to know that it does not belong to one or the other sect, but UNIVERSAL.

The Mantric deity of Gayatri is represented as having Five Faces and Ten Arms. Even in this age, there are people who believe that such a Devi resides somewhere in the Heaven But persons who have correct knowledge to certain extent about the Universe, Legends and Mythology of religions will never accept this as correct. But at the same time, they may not be aware of the correct meaning and deciphering of this Mythology of Gayatri.

So, as a means of illumination to the truth Seekers, I shall try to explain the true significance of Gayatri in modern way on scientific basis, I shall explain the great powers of Gayatri Mantra in another book.

SWAMI R. K. MURUGESU

---

## SPIRITUAL SIGNIFICANCE OF GAYATRI

Though I decipher the symbol in a manner that it teaches something to the student, it also represents that She is the root cause for all the attributes represented by the articles. She holds in her hand.

The word 'GAYATRI' represents: Gayam - Life energy or Prana; Thra – to protects (This is the feminine gender of root 'Thri'). So Gayatri means "one who protects the Life force" We know well that the Sun is the source of all life on the earth planet. If the Sun does not shine for a few days, there will be no life at all on the earth. So, the Sun is the radiator of life energy.

In ancient wisdom, a static substance is considered as the male aspect and its radiation as the female aspect (e-g) a

battery cell is a male form and its current is female. In Hindu Mythology. the static energies reprensented by BRAHMA VISHNU and SHIVA are male aspects and their emanations are represented by SARASWATHI, LAKSMI and GOWRI respectively as the female aspects. The static aspect always resides in its place and only the dynamic aspect functions everywhere. Similary, in our Solar system, the Sun is static or Male aspect and its radiation is dynamic or the Female aspect. The Sun has no connection except through his rays with any of the planet. All activities on our earth are conducted and governed through the rays or the feminine aspect of the Sun. The Sun's rays contain not only light and chemicals but also life-force. So, those who know the truth pray to the Solar radiation as a deity which gives them the life. That is why the solar energy is called " GAYATRI " which means the Giver and protector of life. This is why though the Sun is addressed in masculine gender in all the culture, the Gayatri Mantra addresses the energy in feminine gender because it is this femine aspect of the Sun that controls the planets and life-beings on this earth. Now, I would like to decipher and explain the significance of the symbol of Gayatri, before I take up the Mantra.

The deity of Gayatri is represented with five faces of Grey, Red, Yellow, Blue, and White colours with ornamental crowns on heads, having a moon at the centre of each. She has ten hands and in each of which She holds a whip, a Pasam, a spike, a human skull, a conch, a wheel and two lotuses. One hand represents a boon-giving aspect and the last hand represents that She will grace those who pray and bow unto Her. She is seated on a lotus sprouting from the ocean. The picture on the front page may be compared with the above.

The five faces of Gayatri represents the five greater elements - PRITHIVI = Solid: = APAS = Liquid: THEJAS = Fire VAYU=Air and Akasha=Ether. According to the 'Pancha Bootha' theory, we can distinguish and classify the whole of the Universe and its created things into these five subtler elements The five colours of the faces of Gayatri represent the five elemental colours. Now, it is proved by the Spectrum theory "that the five elements radiate the said five colours. The ornamental crown of the deity represents the firmament where the numerous twinkling stars shine and centre cresent moon represents the growth and decadence of the firmamental existecne Further, the crown also represents the energy of Gayatri or Pranic energy which controls the whole of the Universe.

